**கவனிக்க.**– *2024.02.22 ஆந் திகதிய 2373 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2375 - 2024 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.03.07

*2375 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 7 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1-B 82546-5,441 (2024/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பாராளுமன்றம்

வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் மற்றும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரித்த விண்ணப்பங்கள் கல்வி/அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வந்தடையும் வண்ணம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் விபரங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

1. மொழிபெயர்ப்பாளர்(வெற்றிடம் நிலவும் மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை 13)

(சிங்களம்/தமிழ்/சிங்களம்)/(சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்)/(ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்)

1.1 **சம்பள அளவுத்திட்டம்**:- 2016.11.07ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப்பதவிக்கு குறித்தொதுக்கப்பட்ட மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 32,330-3×380-10×445-4×660- ரூபா 40,560.00 (அனைத்து கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த மாதாந்த ஆரம்ப முழுமொத்த ஊதியம் அண்ணளவாக ரூபா 74,000.00) ஆகும்.

1.2 **வயதெல்லை**:- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் / பாராளுமன்ற சேவையில் ஏற்கனவேநிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

1.3 **கல்வித் தகைமைகள்**:-

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) /மூன்று பாடங்களில் (புதிய பாடத்திட்டம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

அத்துடன்

(i) மொழிபெயர்ப்பாளர்(சிங்களம்/தமிழ்/சிங்களம்)(வெற்றிடம் நிலவும் பதவிகளின் மொத்த எண்ணிக்கை 04)
க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம், தமிழ் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஐந்து திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

(ii) மொழிபெயர்ப்பாளர்(சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) (வெற்றிடம் நிலவும் பதவிகளின் மொத்த எண்ணிக்கை 06)

க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஐந்து திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

(iii) மொழிபெயர்ப்பாளர்(ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்)(வெற்றிடம் நிலவும் பதவிகளின் மொத்த எண்ணிக்கை 03)
க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், தமிழ்மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஐந்து திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.4 **தொழில் தகைமைகள்**:-

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து பெற்ற கணனி அறிவு பற்றிய சான்றிதழ்.

1.5 **அனுபவம்**:-

ஒரு அரசாங்க நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ளஒரு நிறுவனத்தில் மொழிபெயர்ப்பாளராக இணைந்து பின்னர் மொழிபெயர்ப்புப் பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து வருட அனுபவத்தை பெற்றிருத்தல்.

1.6 **ஆட்சேர்ப்பு முறை**:- எழுத்துமூலப் பரீட்சைமற்றும் நேர்முக பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

2. வீடு பராமரிப்பு உதவியாளர் பதவி(வெற்றிடம் நிலவும் பதவிகளின் மொத்த எண்ணிக்கை 14)

2.1 **சம்பள அளவுத்திட்டம்**:-2016.11.07 ஆம் திகதிய 06/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 25,520 - 9×270-10×300.00 - 6×330-32,930.00 (எல்லாத மேலதிக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 63,000.00 ஆகும்.

2.2 **வயதெல்லை** :-விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.3 **கல்வித் தகைமைகள்**:- சிங்கள அல்லது தமிழ் மொழியில் திறமைச்சித்தி அடங்கலாக கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

2.4 **தொழில் தகைமைகள்**:- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் (SLITHM) அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வேறு ஒரு நிறுவனத்தில் ஹோட்டல் வீடுபராமரிப்பு, அறை சேவையாளர் அல்லது அறை சேவை உதவியாளர் பிரிவில் 05 மாதங்களுக்கு குறையாத ஒரு பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்:,

அல்லது

ஹோட்டல் வீடு பராமரிப்பு, அறை சேவையாளர் அல்லது அறை சேவை உதவியாளர் பிரிவுகளில்ஏ்ளு 2 ஆம் மட்டப் பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.5 **அனுபவம்**:- மேற்குறித்த 2.3, 2.4 ஆம் விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளையும் மற்றும் தொழில் தகைமைகளையும் பூர்த்தி செய்ததன் பின்னர், ஒரு நட்சத்திர வகுப்பு ஹோட்டலில், ஹோட்டல்வீடு பராமரிப்பு, அறை சேவையாளர் அல்லது அறை சேவை உதவியாளர் பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.6 **ஆட்சேர்ப்பு**:- எழுத்துமூல/ செயன்முறைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

3. **சேவை நியதிகளும் மற்றும் நிபந்தனைகளும்**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை. எவ்வாறாயினும் இந்தப் பதவிகளுக்கான ஓய்வூதிய உரித்து பற்றி எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப் படும் கொள்கைத் தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். உள்ளகப் பரீட்சாத்தி ஒருவர் அல்லது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும்விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றப் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தினால் குறிப்பீடுசெய்யப்படும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளங்களிலில் இருந்து விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்படும்விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

4. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். கேட்டுக்கொள்ளப்படும் பட்சத்தில்மாத்திரம்மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்பு சான்றிதழ் பத்திரம்

(ஆ) கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்

(இ) தொழில் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்

(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்

5. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் / அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள /நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

6. ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்கு செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

7. வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், அப்போது அவர் தகைமையற்றவர் என குறிப்பிடப்படுவதற்கும்,மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எந்த விதமான நஷ்டஈடுகளும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

8. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள /நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத அல்லது மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

சமிந்த குலரத்ன,
பதில் பாராளுமன்ற செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2024.03.05.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

............................................................ பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..........................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்): ..........................................................................
..........................................................................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (திரு./திருமதி/செல்வி): ..........................................................
..........................................................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி (ஆங்கிலத்தில்):.....................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி (ஆங்கிலத்தில்): ........................................................................................
..........................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(இ) தயவுசெய்து பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பி வைக்க வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக.

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி: ............................................

(பிறப்புச் சான்றிதழின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது: வருடங்கள்: ........ மாதங்கள்: ........ நாட்கள்: ..........

05. சிவில் அந்தஸ்து :........................................................

06. பால்நிலை: ...............................................................

07. இலங்கைப் பிரசையா: (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

க. பொ. த. (உ./த.)

| பாடம் | பெற்ற சித்திகள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

க. பொ. த. (சா./த.)

| பாடம் | பெற்ற சித்திகள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

09. தொழில் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| பாடநெறி | நிறுவனம் | செயல்வலுப்பெறும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |

10. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழில் பற்றிய விபரங்கள்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ..................................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : .....................................................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி : ..............................................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம் : ........................................................................................................................

(உ) கொடுப்பனவுகள் : ...........................................................................................................................................

(ஊ) முழு மொத்த சம்பளம் : ...................................................................................................................................

12. ஒரு குற்றவியல் குற்றத்திற்கு நீங்கள் ஒரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக கணிக்கப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை)

ஆம் எனில், விபரங்களை குறிப்பிடுக:

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

13. இதற்கு முன்னர் நீங்கள் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம்/இல்லை)

ஆம் எனில், விபரங்களை குறிப்பிடுக:

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள எல்லா விபரங்களும் யாவும் உண்மையானவையும் மற்றும் சரியானவையும் என இத்தால் உறுதியுரைக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் பொய்யானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எந்தவித நஷ்டஈடுகளும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

............................................................

திகதி:................. விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்த நிறுவனத்தில் ...................................................................... என்ற பதவியை வகிக்கும் திரு/திருமதி/செல்வி ........................ ................................................................. என்பவரின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து அனுப்பி வைக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், இவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானது எனவும், இவர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆளாக்கப்படவில்லை அல்லது அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் எடுக்கும் அபிப்பிராயம் இல்லை எனவும் நான் சான்றுபடுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் /விடுவிக்கப்படமாட்டார் (தயவுசெய்து பொருத்தமற்ற சொற்களை கீறிவிடுக).

...........................................................................................

திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி:.....................

03-269

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்

## (தொழில்நுட்பம் அல்லாத) வகை – 02 சேவை வகுதிக்குரிய உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை- 2024

01. அரச சேவையின் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் தொடர்பாக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களது குழுவின் 2022.11.10 (ஆறாம் கூட்டம்) திகதியுடைய அறிக்கைக்கு அமைவாகவும், இலக்கம். அவி/22/2034/605/011-II மற்றும் 2022.12.20 திகதியுடைய அமைச்சரவை தீர்மானம் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தேயலாளரின் இலக்கம். PSC/EST/02/-07/02/2018 மற்றும் 2023.03.27ம் திகதியுடைய கடிதத்திற்கும் அமைவாக இவ் அமைச்சின் கீழ் வெற்றிடங்கள் நிலவும் உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் பதவி வெற்றிடங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதனூடாக நியமனம் செய்யப்படுவதுடன் அதற்காக நடாத்தப்படும் பரீட்சை 2024, யூலை மாதம் 13 ஆந் திகதியன்று கொழும்பில் நடாத்தப்படும்.

02. 2016.02.25ம் திகதியும் 03/2016 இலக்கமும் உடடய பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் MN1-2016 சம்பளக் குறியீடானது இப் பதவிக்கு உரித்தாகும் என்பதுடன் அதற்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 27,140-300 × 10 -350×11- 495 ×10 - 660 ×10-ரூபா 45,540.00 ஆகும்.

03. **மதிப்பீட்டுச் செயன்முறை :-**

உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்காக 80 பேரை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக கல்வி அமைச்சின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் பொது அறிவு மற்றும் பொது உளச் சார்பு ஆகிய விடயங்கள் உள்ளடங்கிய எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றி ஒவ்வொரு பாடங்களிலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்று சித்தியடைதல் வேண்டும். எழுத்து மூலப் பரீட்சையின் திறமை வரிசைப்படி நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கான விண்ணப்பதாரர்கள் தகைமைகளை மதிப்பீடு செய்வதற்குரிய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகள் அல்லது திறமை வரிசைகள் தொடர்பான விபரங்கள் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை சபையினருக்கு வழங்கப்படமாட்டாது.) அதன் படி கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சை சபையினரால் அனுமதிக்கப்பட்ட புள்ளி வழங்கல் திட்டம் ஒன்றிற்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன் அடிப்படை தகைமைகளும் பரிசோதிக்கப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு விண்ணப்பதாரர்களதும் திறன்கள் தீர்மானிக்கப்படும்.

| | மொத்தப் புள்ளிகள் | |
|---|---|---|
| பொது அறிவு (எழுத்து மூலப் பரீட்சை) | 100 | (காலம் 01 மணித்தியாலம்.) |
| பொது உளச் சார்பு (எழுத்து மூலப் பரீட்சை) | 100 | (காலம் 01 மணித்தியாலம்.) |
| தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை | 50 | |

3.1 எழுத்து மூலப் பரீட்சை தொடர்பான விபரங்கள்

இந்த எழுத்து மூலப் பரீட்டே கீசழ குறிப்பிடப்பட்டுள்ளவாறு 02 வினாப் பத்திரங்களைக் கொண்டது. இவ் எழுத்து மூலப் பரீட்சை 2024, யூலை மாதம் 13 ஆந் திகதியன்று கொழும்பில் நடாத்தப்படும்.

I. பொது அறிவு (காலம் 01 மணித்தியாலம், 100 புள்ளிகள்)

உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் (ஆண்)/உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் (பெண்) பதவிக்குரிய கடமைகள், விடுதி மாணவர்களது ஒழுக்கம், பாதுகாப்பு, நலன்புரி மற்றும் உணவு வழங்கல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாணவர் விடுதி அத்தியட்சகருக்கு ஒத்துழைப்பு வழங்குதல், விடுதி மாணவர்களது நலனுக்காகவும் விடுதி மாணவர்களது பாதுகாவலராகவும் செயற்படல், உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குரிய ஏடுகளை பேணுதல், கொள்வனவு செய்தல், பாதுகாத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான செயற்பாடுகள், உணவு சமைத்தல் தொடர்பாக பரிசோதித்தல், சமையலறை கருவிகளின் தூய்மைத் தன்மை தொடர்பாக செயற்படல், விடுதியை சுத்தமாக வைத்திருப்பதற்கான விதிமுறைகளை பிரயோகித்தல், நோய் வாய்ப்படக்கூடிய மாணவர்கள் தொடர்பான செயற்பாடுகள், அரசிற்கு உரித்தானவற்றை பாதுகாப்பதற்குரிய செயற்பாடுகள், தூய்மைத் தன்மையை பேணுதல் தொடர்பாக மேற்பார்வை

செய்தல், விடுதிகளுக்கு நீர், மின்சார வசதிகளை முறையாக வழங்குவதற்குரிய செயற்பாடுகள், விடுதியில் தங்கியிருப்பவர்கள் விடுதியில் இருந்து வெளிச் செல்லல் மற்றும் வருகை தரல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் பதவிக்குரியதாக நிறுவனத் தலைவரால் கையளிக்கப்படும் இன்னோரன்ன செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான பொது அறிவினைப் பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பல்வேறு முறையிலான வினாப் பத்திரம் ஒன்றாகும்.

II **பொது உளச் சார்பு (காலம் 01 மணித்தியாலம், 100 புள்ளிகள்)**

விண்ணப்பதாரர்களது எண்கணித திறன்கள், தர்க்கவியல் இயலுடமைகள் மற்றும் பொது உளச்சார்பு அளவிப்படக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள பல்தேர்வு முறை வினாப் பத்திரம் ஒன்றாகும்.

3.2. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை (50 புள்ளிகள் )

மேலே குறிப்பிடப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் 3.2.1 இல் தரப்பட்டுள்ள பிரதான துறைகளில் கீழ் புள்ளிகள் வழங்கப்படும். புள்ளி வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்படும் தகைமைகள் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னராக பூர்த்தி செய்யப்படிருத்தல் வேண்டும். இதன் போது வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளமை நிரூபணமாகும் பட்சத்தில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் படி விண்ணப்பதார்கள் மற்றும் அவர்களது விண்ணப்பப் படிவங்களை சான்றுப்படுத்திய நிறுவனத் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.2.1 கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) வகை - 02 சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கமைய உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை - புள்ளி வழங்கல் திட்டம் - 2023

| வழங்கப்படும் பிரதான துறைகள் | புள்ளி வழங்கப்படும் முறை | உச்சபட்ச புள்ளிகள் | |
|---|---|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமைகள்<br>i. க.பொ.த. (சா.த.) | • மிகச் சிறந்த சித்தி<br>• ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• விசேட திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம்<br>• திறமைச் சித்தி - ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம் (கணிதம், தாய் மொழி, ஆங்கிலம், மற்றும் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருப்பதற்கு மேலதிகமாக) | 10 | 15 |
| ii. க.பொ.த. (உ.த.) | • மிகச் சிறந்த சித்தி - ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• விசேட திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம்<br>• திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளி வீதம் | 05 | |
| iii. பட்டம் | | 15 | |
| 02. சேவை அனுபவம் | 05 வருடங்களின் பின்னர் அதிகமாக உள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் 02 புள்ளிகள் வீதம் | 15 | 15 |
| 03. கணினித் தகைமைகள்<br>• அரசாங்க பதிவிலக்கம் சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை எனின் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உரிய நிறுவனத்தினால் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். | அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கணிணி தொடர்பான டிப்ளோமா அல்லது அதற்கு மேலான சான்றிதழ் ஒன்று | 3 | 5 |
| | அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றில் கணிணி தொடர்பான சான்றிதழ் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்திருத்தல். | 2 | |

| வழங்கப்படும் பிரதான துறைகள் | புள்ளி வழங்கப்படும் முறை | உச்சபட்ச புள்ளிகள் | |
|---|---|---|---|
| 04. தாய் மொழி மற்றும் இரண்டாம் மொழி தவிர்த்து வேறு மொழி ஒன்றில் தேர்ச்சி (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்) | ஆங்கிலம் அல்லது வேறு மொழி ஒன்றில் ஆகக் குறைந்தது டிப்ளோமா ஒன்றை பூர்த்தி செய்திருத்தல். | 5 | 5 |
| | க.பொ.த (உ.த) இல் பாடம் ஒன்றாக ஆங்கிலம் அல்லது வேறு மொழி ஒன்றை கற்றிருத்தல் (1 இன் கீழ் புள்ளி வழங்கப்பட்டிருப்பின் இதற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.) | 2 | |
| 05. நிறுவனத்தின் முன்னேற்றத் திற்காக வழங்கியுள்ள பங்களிப்பு | பாராட்டுக் கடிதங்கள் - ஒரு கடிதத்திற்கு 2.5 புள்ளிகள் வீதம் • தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலை வரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | 5 | 5 |
| | ஒரு மதிப்புக் கடிதத்திற்கு - ஒரு புள்ளி வீதம் • தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | 5 | |
| 06. நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன் | ஆளுமை | 3 | 5 |
| | தொடர்பாடல் திறன்கள் | 2 | |
| | மொழி ஆளுகை | 1 | |

(அனைத்து தகைமைகளும் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

04. இதற்காக நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை 2024, யூலை மாதம் 13 ஆந் திகதியன்று கொழும்பில் நடைபெறும். இப் பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

05. **தகைமைகள் :-** கல்வி அமைச்சின் ஆரம்ப மட்டம் (தேர்ச்சி அற்ற) மற்றும் ஆரம்ப மட்டம் (அரைத் தேர்ச்சி) சேவை வகுதிக்கு உரித்தான பணியாளர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் உதவி விடுதி அத்தியட்சகர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு,

(அ) **கல்வித் தகைமைகள் :-**
கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் தாய் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள்லும் இன்னும் ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) **அனுபவம் : -**
உரிய திகதிக்கு கல்வி அமைச்சின் கீழ் ஆரம்ப மட்ட சேவை வகுதியில் நிரந்த பதவி ஒன்றில் 05 வருட முனைப்புடனும் மகிழ்ச்சிகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) **ஏனைய தகைமைகள் : -**

I. கல்வி அமைச்சின் கீழ் ஆரம்ப மட்ட சேவை வகுதியின் கீழ் நிரந்தர பதவி ஒன்றை வகித்தல் வேண்டும் என்பதுடன் அப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமனம் செய்யப்பட முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/ அமைய/ ஒப்பந்த அடிப்பையிலான சேவைக் காலங்கள் மற்றும் ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கான நிபந்தனையொன்றாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலப் பகுதியானது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

III. தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய அண்மித்த 05 வருடங்களினுள் மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. 01/2020 சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனை ஒன்று விதிக்கப்படாதவராக இருத்தல்.

V. உரிய திகதிக்கு உரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையை நிறைவு செய்திருத்தல்.

VI. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான உள மற்றும் உடலியல் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

உயர்ந்த பட்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது

06. **விண்ணப்பிக்கும் முறை**: -

(அ) விண்ணப்பப் படிவம் இச் சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி அமைப்பிற்கு அமைவாக தயாரிக்கப் பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது A4 அளவிலான கடதாசியின் இரு பக்கத்திலும் அமைந்திருப்பதுடன் விண்ணப்பதாரராலேயே பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 01 முதல் 04 வரையான பகுதிகள் முதலாம் பக்கத்திலும், 05 முதல் 09 வரையான பகுதிகள் இரண்டாம் பக்கத்திலும், 10 முதல் 14 வரையான பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் மீதியாக உள்ள பகுதிகள் நான்காம் பக்கத்திலும் அமையக்கூடியவாறு தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்துக்களாலேயே தெளிவாக பூரணப் படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவ மாதிரியுடன் பொருந்தாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் முழுமையற்ற தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் யாவும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப் படிவத்தின் நகல் பிரதி ஒன்றை வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும்.

(ஆ) எழுத்து மூலப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் அவர்களது சேவையில் இணைந்துள்ள மொழி மூலத்தில் அல்லது வேறு அரசகரும மொழி மூலம் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பப் படிவமானது தாம் எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னராக மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும் போது அதன் மேல் பக்கமாக குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும்.

(இ) பரீட்சைக்குரிய பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை, தேசிய பாடசாலை, ஆசிரியர் மத்திய நிலையம் அல்லது ஆசிரியர் கல்லூரி ஒன்றில் சேவையாற்றும் விண்ணப்பதாரர் ஒருவர் எனின் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாகவும், கல்வியியற் கல்லூரி ஒன்றில் சேவையாற்றும் விண்ணப்பதாரர் ஒருவர் எனின் பீடாதிபதி ஊடாகவும் பதிவுத் தபாலில் 2024.03.15ம் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில்,

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 1503,
கொழும்பு.

எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) உத்தியோகத்தர்களால் பூரணப்படுத்தப்பட்டு முன்னிலைப்படுத்தப்படும் விண்ணப்பப் படிவங்கள் தமது அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற தினத்திலேயே அலுவலக திகதி முத்திரையை பதித்து திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்திய திகதியுடன் விண்ணப்பப் படிவங்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் தேசிய பாடசாலை அதிபர்கள்/ ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்/ ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளரூடாக அனுப்பிவைக்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பதுடன் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பணியாற்றுபவர்கள் பீடாதிபதி ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

(உ) கூட்டுத் தாபனம் ஒன்றில் அல்லது சபை ஒன்றில் சேவையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டுள்ள/ சேவைக்காக இரண்டாம் நிலைப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பப் படிவங்கள் உறுதிப்படுத்தப்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(ஊ) உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாதல் அல்லது காணாமல் போகும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பிலும், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி தவிர்த்து வேறு முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(எ) விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம் ஆகியன இது தொடர்பான சகல செயற்பாடுகளின் போது கருத்தில் கொள்ளப்படும் என்பதுடன், விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைத்ததன் பின்னர் ஏற்படக்கூடிய மாற்றங்கள் எவையும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

07. **பரீட்சைக் கட்டணம்**: -

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். இத் தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பான 20-03-02-13இன் கீழ் அரசாங்க வருமானத்தில் வைப்புச் செய்யக்கூடிய நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும்/ மாவட்ட செயலகத்திலும்/ பிரதேச செயலகத்திலும் செலுத்த முடியும். விண்ணப்பதாரர்களது பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச் சீட்டின் ஒரு விளிம்பினை உரிய இடத்தில் கழறாத வகையில் ஒட்ட வேண்டும். (பற்றுச் சீட்டின் நகல் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாகும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

08. **பரீட்சைக்கான அனுமதி**: -

(அ) எழுத்துமூலப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தின் மண்டப பிரதானியிடம் தமது கையொப்பங்கள் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை முன்னிலைப்படுத்த வேண்டும்.

தமது அனுமதி அட்டையை முன்னிலைப்படுத்தாத விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

(ஆ) பரீட்சை விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்களுக்குரிய அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்ட உடன் அவ் விடயம் தொடர்பான அறிவித்தல் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கழிந்ததன் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு அது தொடர்பாக அறிவிக்க வேண்டும். உங்கள் வசமிருக்கும் விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றுடன், பரீட்சையின் பெயர், உங்களுடைய முழுப் பெயர் மற்றும் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் அது தொடர்பாக விசாரிக்குமாறு தெரிவித்துக் கொள்வதுடன், கொழும்பிற்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரர்களாக இருப்பின் உங்களது மேற்படி விபரங்கள் மற்றும் அனுமதி அட்டையை தொலை நகல் மூலம் அனுப்பிவைப்பதற்காக உங்களது தொலை நகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றை பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலை நகல் மூலமாக அனுப்புவதனூடாக அது தொடர்பாக விசாரிப்பது விளைதிறன் மிக்கதாக இருக்கும்.

(ஈ) எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை சபையினரால் வழங்கப்படும் புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு அமைய திறமை வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் பட்டியல், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படும். அவ்வாறு வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகளை தனித் தனியாக அனுப்பிவைப்பதற்கு அல்லது இணையத் தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

(உ) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட இறுதிப் பெறுபேறுகள் ஆவணம் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

**குறிப்பு**:- விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்குவதனூடாக அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

09. பரீட்சை விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடங்களின் போது மண்டப பிரதானி திருப்தியடையக்கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழே தரப்பட்டுள்ள ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதே போன்று பரீட்சை விண்ணப்பதாரர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை நிறைவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை மேற்பார்வையாளர்கள் விண்ணப்பதாரரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்** : -

(அ) இப் பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கமைய எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவர் என கண்டறியப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது அதன் பின்னர் அல்லது எந்தவொரு தருணத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் ஏதேனும் ஒரு பொய்யான தகவலை வேண்டுமென்றே முன்னிலைப்படுத்தியுள்ளமை கண்டறியப்படும் பட்சத்தில் அல்லது ஏதேனும் முக்கியமான விடயம் ஒன்றை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்களுக்கு உட்படுவார்.

(இ) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளை பரீட்சை விண்ணப்பதாரர்கள் பின்பற்ற வேண்டும். குறித்த சட்ட விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்குஉட்பட நேரிடும்.

11. **நியமனத்திற்காக தெரிவு செய்தல்**:-
தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளை பின்பற்றி நிரப்பப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு தெரிவு செய்யப்படுவர். (எழுத்து மூலப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். அவ்வாறு ஆகக் குறைந்த புள்ளியான 40 புள்ளிகளை பெறாத விண்ணப்பதாரர்கள் இந் நியமனத்தை பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாவர்)

12. பரீட்சையில் சித்தியடையும் ஒரு விண்ணப்பதாரர், குறித்த நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அமுலில் உள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகளின் படி நியமனம் பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெறவில்லை என்பதாக கருதப்படும் பட்சத்தில் அல்லது திருப்தியற்ற சேவை, நடத்தை போன்றனவற்றை கருத்தில் கொண்டு நியமனத்தை வழங்காதிருப்பதற்கான உரிமை கல்வி அமைச்சிற்கு உள்ளது.

13. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்பதற்கும், இங்கு ஒழுங்குவிதிகள் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானிப்பதற்குமான அதிகாரம் கல்வி அமைச்சினை சாரும்.

14. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் அதன் போது சிங்கள மொழி மூலமான அறிவித்தல் செல்லுபடியானது என கருத்தில் கொள்ளப்படும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2024..........

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக பயன்பாட்டிற்கு மாத்திரம்)

கல்வி அமைச்சின்முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) வகை - 02 சேவை வகுதிக்குரிய உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை - 2024

**Competitive Examination for Recruitment to the Post of Assistant Superintendent of Hostel inthe Management Assistant (Non-Technical) Segment II Service Category of the Ministry of Education – 2024**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்: சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

நீங்கள் உரித்தாகும் சேவை வகுதி

கருத்தில் கொள்க: கல்வி அமைச்சின் ஆரம்ப மட்டம் தேர்ச்சி அற்ற, ஆரம்ப மட்டம் அரைத் தேர்ச்சி மற்றும் ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெற்ற பணியாளர்களுக்கு மாத்திரம்

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ..........................................................................................................
..........................................................................................................
(உ+ம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) : ..........................................................................................................
..........................................................................................

1.3 முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்) ..........................................................................................................
..........................................................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

02. 2.1 உத்தியோகபூர்வ முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)........................................................................................ ......
..........................................................................................................
(அனுமதி அட்டை இம் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்)

2.2 உத்தியோகபூர்வ முகவரி (சிங்களம்/தமிழில்):........................................................................................................ ..........
..........................................................................................

2.3 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்):............................................................ ..........................................
..........................................................................

2.4 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்): ..........................................................................................................
..........................................................................................

2.5 கையடக்க தொலைபேசி இலக்கம்:

03. பிறந்த திகதி :-
வருடம்: மாதம் : திகதி :

04 பெண்/ஆண் (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

ஆண் - 0
பெண் - 1

05. தற்போது வகிக்கும் பதவி (நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) ..............................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

6.1 நியமனக் கடித இலக்கம்: ..........................................................................................
6.2 நியமனத் திகதி:..................................................................................................

06. கடந்த 05 வருடங்களில் உங்களது விசேடமாக குறிப்பிடவேண்டிய செயற்பாடுகளாக தாங்கள் கருதுவது யாது?
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

07. கடந்த 05 வருடங்களில் உங்களது செயலாற்றுகை அறிக்கைகளில் எதிர்மறையான குறிப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனவா?
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

அவ்வாறிருப்பின் அது தொடர்பான விபரங்களை குறிப்பிடவும் ..........................................................................
.....................................................................................................................................................

08. விண்ணப்ப இறுதித் திகதிக்கு அண்மித்த முந்தைய ஐந்து வருட காலப் பகுதியினுள் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளீர்களா? ..........................................................................................................................
..........................................................................................................

2018.12.31ம் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளாத சம்பள ஏற்றங்கள் இருப்பின் அதற்குரிய காரணங்களை குறிப்பிடவும்.
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

09 கடந்த 05 வருடங்களில் ஒழுக்காற்றுச் சட்ட விதிமுறைகளின் கீழ் உங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? ..........................................................................................................

அவ்வாறிருப்பின் தவறு மற்றும் வழங்கப்பட்ட தண்டனையின் தன்மை மற்றும் தண்டனை வழங்கப்பட்ட திகதி போன்றனவற்றின் விபரங்கள் ..........................................................................................................
.....................................................................................................................................................

10. உங்களது சேவைக் காலத்தினுள் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நேர்மையின்மை தொடர்பான ஏதேனும் ஒரு செயற்பாட்டிற்கு அல்லது ஒழுக்கமின்மையை வெளிக்காட்டும் தவறான நடத்தை ஒன்றில் ஈடுபட்டமைக்காக தண்டனை பெற்றுள்ளீர்களா? ..
.....................................................................................................................................................

அவ்வாறிருப்பின் உரிய தவறின் தன்மை, வழங்கப்பட்ட தண்டனை மற்றும் தண்டனை வழங்கப்பட்ட திகதி ஆகியன தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும். ..........................................................................................
.....................................................................................................................................................

11. மேலே 9 இல் குறிப்பிடப்பட்ட எதிர்மறையான குறிப்புக்கள் அல்லது மேலே 10 இல் குறிப்பிடப்பட்ட ஒழுக்கரீதியான செயற்பாடுகள் தொடர்பாக உங்களுக்கு அவதானிப்புக்கள் ஏதும் உள்ளனவா? ..........................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

12. விசேட தகைமைகள் ..........................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

13. பரீட்சை கட்டணத்தை செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரங்கள்

I. பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய அலுவலகம் :..........................................................

II. பற்றுச் சீட்டு இலக்கம்: ..................................................................................

III. செலுத்திய தொகை:...................................................................................

(பற்றுச்சீட்டின் ஒரு விளிம்பை இங்கு ஒட்டவும். (பொருத்தம் எனின் மாத்திரம்)
பற்றுச்சீட்டின் நகல் பிரதி ஒன்றை வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும்.)

14. விண்ணப்பதாரரின் பிரகடனம்:

என்னால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன். இதில் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் பொய்யானது என அல்லது போலியானது என தெரிவுசெய்யப்பட முன்னர் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில், என்னை தகுதியற்றவராக்கவும், நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் என்னை சேவையிலிருந்து நீக்கவும் முடியும் என்பதை அறிந்துள்ளேன். அத்துடன் பரீட்சை நடாத்துவதுடன் தொடர்புடையதாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகள் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் உடன்படுகின்றேன் என்பதையும் பிரகடனப்படுத்துகின்றேன்.

..........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்
(திணைக்களத் தலைவரின் முன்னிலையில்)

திகதி:.......................................

**குறிப்பு** : தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் முன்னிலையின் விண்ணப்பதாரர் கையொப்பமிடல் வேண்டும்.

15. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

இவ் அலுவலகத்தில்/பாடசாலையில்/கல்வியியற் கல்லூரியில்/ஆசிரியர் கல்லூரியில்/ஆசிரியர் நிலையத்தில் பணியாற்றுபவர் என்பதுடன் நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்தவராகிய திரு/ திருமதி/ செல்வி ....................................................................... ............................ அவர்கள் ............................................ திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டதுடன் உரிய பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை
(அண்மித்த பதவி நிலை உத்தியோகத்தர்/அதிபர்)

பெயர் :.........................................................................................................
பதவிப் பெயர் :............................................................................ ...........................
முகவரி :.........................................................................................................
திகதி :........................................................................................................

16. **திணைக்களத்தலைவரின்உறுதிப்படுத்துகை**:

1. மேலே தரப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்துப் பார்த்ததாகவும்
2. இவ் உத்தியோகத்தருக்கு இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவசியமான தகைமைகள் உள்ளன எனவும்,
3. உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்து கின்றேன்.

.............................................................................................
திணைக்களத்தலைவர்/வலயக்கல்விப்பணிப்பாளர்/
பீடாதிபதியின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

பெயர் :.........................................................................................................
பதவிப் பெயர் :............................................................................ ...........................

## சுகாதார அமைச்சின் இலங்கை தொழினுட்ப சேவைக்குரிய மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்பம் சாராத/தொழினுட்ப சேவை வகையின் (MN 03 - 2006 A) எலும்பியல் பட்டறை தொழினுட்பவியலாளர் பதவிக்கு (திறந்த) ஆட்சேர்த்தல் - 2024

சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் எலும்பியல் பட்டறை தொழினுட்பவியலாளர் (MN 03) – (திறந்த) III ஆம் தரத்தின் பதவிகளுடன் ஏற்புடைய வண்ணம் காணப்படும் 08 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்**:

1.1 **கல்வித் தகைமைகள்**

i. க.பொ.த. (உ.த) பரீட்சையில் பௌதீகவியல் உள்ளிட்ட விஞ்ஞான பாடங்கள் மூன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

ii. க.பொ.த. (சா.த) பரீட்சையில் சிங்களம் /தமிழ் /ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமோர் பாடத்திற்குத் திறமைச்சித்தி சகிதம் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

1.2 தொழில்சார் தகைமைகள் - கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளில் ஒரு தகைமையினைப் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

i. மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழினுட்ப (மின்னியல்/இலத்திரனியல்) டிப்ளோமா

அல்லது

ii. தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் (மின்னியல்/இலத்திரனியல்) விஞ்ஞான டிப்ளோமா

அல்லது

iii. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் (மின்னியல்/இலத்திரனியல்) டிப்ளோமா

அல்லது

iv. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழினுட்ப (மின்னியல்/இலத்திரனியல்) டிப்ளோமா

அல்லது

v. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் I ஆம் பகுதியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

vi. தொழிற் துறையுடன் தொடர்புறும் வண்ணம் தேசிய தொழில்சார் திறன்கள் (NVQ) 06 ஆம் மட்ட தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல்

அல்லது

vii. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழினுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடம் விசாரித்துக் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்படும் தொழினுட்ப தகைமைகளுக்கு அனைத்து விதங்களிலும் பொருந்துகின்றன என மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பிறிதோர் தொழினுட்பத் தகைமையினைப் பெற்றிருத்தல்.

1.3 **தேக ஆரோக்கியம்**:

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராதல் வேண்டும்.

1.4 **ஏனையவை**

i. இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.

ii. சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

iii. ஏதேனுமோர் மதப் பிரிவின் மதகுரு நிலையினை வகிக்கும் எந்தவோர் நபரும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெற மாட்டார்கள்.

iv. சேவையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் ஏற்புடைய அனைத்துத் தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லையினை விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதியாகுகையில் அனைத்து விதங்களிலும் பூரணப்படுத்தியிருப்பின் மட்டுமேயாகும்.

02. **வயதெல்லை**: 18 வருடங்களுக்கு குறையாத 30 வருடங்களுக்கு மேற்படாத

03. **சம்பளக் கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பளப் பரிமாணம்**: 25.02.2016 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை (i) இன் படியான சம்பளம் (MN 03 - 2006(ஏ)

ரூபாய் 31,040 – 10X445 – 11X660 – 10X730 – 10X750 - ரூ. 57,550 ஆகும்.

04. **ஆட்சேர்க்கப்படும் முறை** : எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவானமோர் நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறும் விண்ணப்பதாரர்களது மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு அடிப்படையில் ஆட்சேர்க்க உத்தேசிக்கும் எண்ணிக்கைக்குச் சமமான தொகையினரை பொதுவான நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தி தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

4.1 **ஆட்சேர்ப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை :**

| | பாடத் திட்டம் | நேரம் | உச்ச புள்ளிகளின் அளவு | தேர்ச்சிப் புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| நுண்ணறிவு | சேவைக்கான கடமைகளின் நிமித்தம் பரீட்சார்த்தி ஒருவரின் தகுதிகள் மற்றும் திறமையினை பரீட்சித்துப் பார்க்கும் பொருட்டு இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். | 02 மணித்தியாலம் | 100 | 40% |
| விடயத்துடன் இணைந்த தொழினுட்ப பரீட்சை | பதவியுடன் ஏற்புடைய தொழினுட்ப அறிவினை அளவிடும் பொருட்டு இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். | 1 ½ மணித்தியாலம் | 100 | 40% |

05. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

i. ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

ii. நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது பணிக்கப்படுகின்ற விதத்தில் தங்களினால் அதற்கான உதவுத் தொகைகளைச் செலுத்துதல் வேண்டும்.

iii. விண்ணப்பங்களை தமது நிரந்தர சேவை நிலையத்தின் திணைக்கள /நிறுவனத் தலைவர் மூலம் உறுதிப்படுத்தி அனுப்புவதற்கு கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சையில் தோற்றுவதற்கு முன்னர் அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது ஒப்பத்தினை தாம் சேவை புரியும் நிறுவனத் தலைவரின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

iv. சேவை அனுபவம் தமது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

v. இந் நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்களினுள் முதலாம் தகுதிகாண் தடைப்பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

vi. பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி மற்றும் அதன் இணைச் சுற்றுநிருபங்களின் படி பதவியில் நியமனம் பெற்று 05 வருடங்களினுள் உரிய அரச மொழி பற்றிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

vii. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிக் கோவைகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், அரசினால் அரசினால் வெளியிடப்படும் சுற்றுநிருப விதிமுறைகளுக்கும், சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்பம் சாராத/ தொழினுட்ப சேவை வகை (MN 03 - 2006 A) இற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும், சுகாதாரச் செயலாளரினால் வெளியிடப்படுகின்ற சுற்றுநிருபங்கள் மற்றும் பொது விதிமுறைகளுக்கும் இந் நியமனம் உட்படுகின்றது.

viii. தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற மொழிமூலமே, தாங்கள் நியமனத்தினைப் பெறுவதற்குத் தமைமை பெறும் மொழிமூலம் ஆகும்.

*06.* **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

i. விண்ணப்பதாரர்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியதுடன், எந்தவொரு உத்தியோகத்தரதும் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புதல் கூடாது.

ii. விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்பம் சாராத /தொழினுட்ப (MN 03 - 2006 A) சேவை வகையின் ..................... ................................................ (விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த - 2024" எனக் குறிப்பிட்டு, பணிப்பாளர் (நிர்வாகம்) 07, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

iii. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2024.04.08

iv. பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000.00 ஆகும். இலங்கை வங்கியின் தப்பிரபேன் கிளையில் சுகாதார செயலாளரின் பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வண்ணம், இத் தொகையினை ஏதேனுமோர் இலங்கை வங்கிக் கிளைக்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்பட மாட்டாது என்பதுடன், எதிர்கால பயன்பாட்டின் பொருட்டு பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மற்றும் விண்ணப்பத்தின் பிரதியொன்றினை தன்னகத்தே வைத்துக் கொள்ளுதல் உகந்ததாகும். (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

v. விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

vi. விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் எவ்விதமான மாற்றங்கள் பற்றியும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

*07.* **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :** பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களின் போதும் மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வண்ணம் தமது சுய ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் காட்டப்படும் எந்தவோர் ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சை மண்டபத்தில் நுழையும் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தில் உள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள்நுழைந்த நேரத்தில் இருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பதாரியை இனங்காணக் கூடிய வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாது இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் தேவைப்படக் கூடிய பிற அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதி அட்டை மூலம் தங்களிடத்தே அறியத் தரப்படும். பரீட்சை தொடர்பிலான இந் நியமங்களுக்கு முரணாக கருமமாற்றும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்காமை / பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மண்டப பொறுப்பாளரைச் சாரும்.

*08.* **கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்**

அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணை பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது இலங்கை நிர்வாக சேவையின்/ கல்வி நிர்வாக சேவையின் / அரச கணக்காளர் சேவையின் ரூ. 240,360.00 இலும் கூடிய அடிப்படை வருடாந்த சம்பளமொன்றினைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியொன்றினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

09. **போலியான தகவல்களை வழங்குதல்**

விண்ணப்பத்தினை பூரணப்படுத்துகையில் மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்டதிட்டங்களின் படி யாதேனுமோர் பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபணமாயின் தங்களது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய் அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னரான ஏதேனுமோர் சந்தர்ப்பத்தில் நிரூபணமாயின் அதற்குரிய செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. **பரீட்சை நிபந்தனைகள்**

i. பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியாகுகையில் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். உரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியிராத விண்ணப்பதாரிகள் பரீட்சையில் போதிய அளவிலான புள்ளிகளைப் பெற்றிருப்பினும் நியமனங்களைப் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

ii. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

iii. விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

iv. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமை உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன்கூட்டிய முடிவின் அடிப்படையில் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத்தரப்படும்.

v. மேற்குறித்த இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தவர்கள் மட்டுமே ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்த வர்களாக கருதப்படுவார்கள். போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் கீழ் நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட உள்ளார்கள்.

vi. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மொழிமூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் விரும்பும் ஒரு மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடிவதுடன், விண்ணப்பிக்கும் மொழிமூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் இப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியினால் மட்டுமே பதில் அளித்தல் வேண்டும்.

**கவனத்திற் கொள்ளவும்:-**

i. விண்ணப்பத்தின் அனைத்து வாசகங்களும் பூரணப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் குறித்த தகவல்களின் நம்பகுதன்மை தொடர்பில் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ii. விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறியத்தரப்படும் சந்தர்ப்பங்களில், குறித்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. அவ்வாறின்றி விண்ணப்பத்துடன் எவ்விதத்திலும் தொடர்பற்ற ஆவணங்கள் அல்லது அதன் பிரதியினை இணைத்தல் கூடாது.

iii. விண்ணப்பம் அல்லது அது தொடர்பிலான கடிதமொன்று தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமடைந்ததாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

iv. நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை, பதவிகளுக்கு நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களின் ஏதேனுமோர் எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

v. பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உள்வாங்கப்பட்டுள்ள அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் சிக்கலானதோர் நிலை ஏற்படின் அது பற்றிய சுகாதார அமைச்சுச் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும். அவ்வாறே இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களிடையே ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின், அவ்விடத்தே சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாகுதல் வேண்டும்.

வைத்தியர் பீ.ஜீ. மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய"
இல 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2024, பெப்புருவரி 28.

மாதிரி விண்ணப்படிவம்

**சுகாதார அமைச்சின் இலங்கை தொழினுட்ப சேவைக்குரிய மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்பம் சாராத/தொழினுட்ப சேவை வகையின் (MN 03 - 2006 A) எலும்பியல் பட்டறை தொழினுட்பவியலாளர் பதவிக்கு (திறந்த) ஆட்சேர்த்தல் - 2024**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- வதிவிட மாவட்டம் : [ ]
(சிங்களம் S, தமிழ் - T, ஆங்கிலம் - E) :
(குறித்த ஆங்கில எழுத்தினை கூண்டினுல் எழுதவும்)

01.
i. முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........

ii. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........

iii. முதலெழுத்துக்களுடனான பெயர்: Mr/Mrs/Miss. ..........
(ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்) - உதாரணம்:- Mr/~~Mrs/Miss.~~ SILVA A. B.

iv. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ..........

02. வதிவிட முகவரி

i. நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்): ..........

ii. நிரந்தர வதிவிட முகவரி (சிங்களத்தில்/தமிழில்): ..........

03. பிறந்த திகதி:- வருடம்: [ | | | ] [ | ] மாதம்: [ | ] திகதி:

3.1 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது

வருடங்கள்: [ | | | ] [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்:

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

05. தொலைபேசி இலக்கம் (கையடக்க) .................................. நிலையான: ..................................

06. மின்னஞ்சல் முகவரி : ..............................................................

07. பால்:- ஆண் : ☐ ☐ பெண் :

08. இலங்கைப் பிரசையா என்பது பற்றி:- ஆம் ☐ ☐ : இல்லை :

09. விவாகமானவரா / விவாகமாகாதவரா: ....................................................

10. கல்வித் தகைமைகள்:-

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை:-

வருடம்: .................................... பரீட்சை இலக்கம்: ..............................................

| தொ/இ | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சை:-

வருடம்:.................................. பரீட்சை இலக்கம்:..............................................

| தொ/இ | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |

(இ) தொழில்சார் மற்றும் தொழினுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள்:-

| சான்றிதழ் | வழங்கிய நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(தொழில்சார் மற்றும் தொழினுட்பத் தகைமைகளுக்கான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்)

(ஈ) ஏனைய விசேட தகைமைகள் மற்றும் அனுபவங்கள்.

.......................................................................................................................

.......................................................................................................................

……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

11. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

i. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :-……………………………….
ii. செலுத்திய தொகை :- ……………………………….

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1,000.00 தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழறாத வண்ணம் இங்கு ஒட்டவும் (விண்ணப்பத்தின் மற்றும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தன்னகத்தே வைத்துக் கொள்ளுதல் பின்னர் பயனளிக்கலாம்). |

12.**விண்ணப்பதாரியின் உறுதியுரை**:-

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கும் ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அவ்விண்ணப்பம் இரத்தாகும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி:…………………………… …………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

13.விண்ணப்பதாரரின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல்:

இவ் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ……..............……………………………………… என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் …………….……… ஆந் திகதி அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………..
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்,

முழுப் பெயர் :- ……………………………………
பதவி :- ……………………………………
முகவரி :- ……………………………………
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்தவும்).

14. தற்போது அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றும் வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும் கீழ்வரும் விடயங்கள் ஏற்புடையனவாகும்.

15.1 திணைக்கள /நிறுவனத் தலைவரினால் பூரணப்படுத்தப்பட வேண்டிய விபரங்கள்
i. உத்தியோகத்தரின் பெயர்: …………………………………………………………………….
ii. நிரந்தர சேவை நிலையம் மற்றும் முகவரி:……………………………………………………
iii. நிரந்தர சேவை நிலையத்தின் தொலைபேசி இலக்கம்: ………………………………………..
iv. உத்தியோகத்தரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்: …………………………………..
v. பரீட்சைக்கு விண்ணப்பிக்கையில் வகித்த பதவி: ………………………………………………
vi. அப் பதவியில் நியமனம் பெற்ற திகதி:…………………………………………………………….
vii. அப் பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா? (“ஆம்” எனில் நிரந்தரப்படுத்திய திகதியினைக் குறிப்பிடவும்)
……………………………………………………………………………………………………………

viii. சேவைக் காலத்தினுள் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைகளைப் பெற்றுள்ளாரா? ("ஆம்" எனில், அது பற்றிய விபரங்களை உள்ளடக்கவும்)

……………………………………………………………………………………………………………

ix. தற்சமயமாகுகையில் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா? ("ஆம்" எனில், அது பற்றிய விபரங்களை உள்ளடக்கவும்)

……………………………………………………………………………………………………………

ix. தற்சமயமாகுகையில் ஒழுக்காற்று ரீதியிலான விசாரணைகள் இடம்பெறுகின்றனவா? ("ஆம்" எனில், அது பற்றிய விபரங்களை உள்ளடக்கவும்)

……………………………………………………………………………………………………………

இவ் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி.................................................... இந் நிறுவனத்தில் ............................... ............................ ஆந் திகதி முதல் ................................................. (பதவியை குறிப்பிடவும்) சேவையாற்றுகின்றார். அவர் நிரந்தர, ஓய்வூதியம் கொண்ட பதவியொன்றினை வகிக்கின்றார். மேலே 14 ஆம் விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் அடிப்படையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன எனவும், அவை சரியானவை எனவும், அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்பட மாட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………..
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

கையொப்பம் :- ………………………………………………… …………………………………

பெயர் :- ……………………………………………………… ……………………………….

பதவிப் பெயர் :- ……………………………………………… ………………………................

திகதி :- ………………………………………………………… …………………..................

திணைக்களம்/ நிறுவனம் :-…………………………………………………

**இலங்கைச் சுங்கத் திணைக்களம்**

ஒருங்கிணைந்த சுங்க சேவையில் தரம் II பதவிக்கு ஆட்சேர்த்தல்

